### நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம்

# ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, நவ.30-

“வருகின்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம் ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.



இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:

**மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டே, தமிழ்நாட்டு மக்களின் குரலை ஒன்றிய பா.ஜ.க. அரசு புறக்கணிப்பது சரியா?**

**தமிழ்நாட்டின் கோரிக்கைகளை–தேவைகளைக் கடிதங்களாக, நேரில் மனுக்களாக, சட்டமன்றத் தீர்மானங்களாக எடுத்துச் சொல்லியும் காதில் வாங்காமல் இருப்பது நியாயமல்ல!**

**அதிகமான வரி வருவாயைத் தரும் மாநிலமான தமிழ்நாட்டுக்கு வஞ்சனை செய்வதை மனச்சாட்சியுள்ள யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். உங்கள் வஞ்சனைகளைக் கடந்துதான் நாட்டிலேயே அதிகமான 11.19% பொருளாதார வளர்ச்சியை அடைந்திருக்கிறோம். குட்ட குட்ட குனிய மாட்டோம்; நிமிர்ந்து நடைபோடுவோம்!**

**வருகின்ற நாடாளுமன்றக் கூட்டத்தொடரில், தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம் ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் சொல்லியே ஆகவேண்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



தருமபுரியை அடுத்த சோகத்தூர் கூட்ரோடு பகுதியை சேர்ந்த பாஸ்கர் என்பவரது மகன் 9 ஆம் வகுப்பு மாணவரான அன்பரசு தருமபுரி பேருந்து நிலையத்திற்கு அரசு நிகழ்சிக்கு வந்த தருமபுரி ஆ.மணி எம்.பி.யிடம் தனது தந்தை இறந்து விட்டதால் தான் படிப்பை தொடர அரசு உதவி தொகை கிடைக்க வழி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார். சிறுவனின் கோரிக்கையை கனிவுடன் முழுவதும் கேட்ட ஆ.மணி எம்.பி. உடனடியாக அச்சிறுவனின் கோரிக்கையை நிறைவேற்ற அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.



டித்வா புயல் காரணமாக அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நேற்று (29.11.2025) சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார். இக்கூட்டத்தில், வருவாய் நிருவாக ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம்.சாய்குமார், பேரிடர் மேலாண்மை ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – ஹாக்கி இந்தியா இணைந்து நடத்தும்

# 14-வது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பைப் போட்டி!

## இந்திய அணி மூத்த வீரர்களுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்!

சென்னை, நவ. 30 -

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்தும் 14-ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டியின் தொடக்க விழாவில், ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற இந்திய அணியின் மூத்த வீரர்களை சிறப்பித்தார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டின் வீரர்கள் பிற நாடுகளுக்கு சென்று சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் வெல்ல செய்வதோடு நிற்காமல், உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கு பெறும் வகையில் சென்னையில் ஆசிய, சர்வதேச அளவிலான பல்வேறு விளையாட்டு போட்டிகளை தொடர்ந்து நடத்தி, சென்னையை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாகவும், உலகின் முக்கிய நகரமாகவும் உருவாக்கி வருகின்றார்.

அதன் அடிப்படையில் மாமல்லபுரத்தில் 186 நாடுகளைச் சார்ந்த சதுரங்க விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற 44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி, உலகமே சென்னையின் அழகை கண்டுகளித்த சென்னை பார்முலா 4 இரவு நேர சாலை கார் பந்தையம், சென்னை ஓபன் (WTA) சர்வதேச டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2022 போட்டி, ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2023 போட்டி, 7ஆவது “ஆசிய சாம்பியன்ஸ் டிராபி (ஆடவர்) சென்னை - 2023” போட்டி, 2023-ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச அளவிலான உலக சர்ஃபிங் லீக் போட்டி, HCL சைக்ளோத்தான் (CYCLOTHON) போட்டி, ஏடிபி சேலஞ்சர் 100 சர்வதேச ஆண்கள் டென்னிஸ் போட்டி, ”சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2025” என பல்வேறு சர்வதேச போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்தும் 14-ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டி, தமிழ்நாட்டில் சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம் மற்றும் மதுரையில் அமைந்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு அணையத்தின் ஹாக்கி விளையாட்டரங்கம் ஆகிய இரு இடங்களிலும் 28.11.2025 தொடங்கி 10.12.2025 வரை சிறப்பாக நடைபெற உள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் (5.11.2025) அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் அறிமுகப்படுத்திய 14-வது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டிக்கான வெற்றிக் கோப்பை இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் பயணம் மேற்கொண்டதுடன், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் பயணத்தை தொடர்ந்து சென்னை வந்தடைந்தது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் (10.11.2025) அன்று சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 14-ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டியின் ”காங்கேயன்” சின்னத்தினை அறிமுகப்படுத்தினார்.

இளையோர் ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பை போட்டியில் 24 நாடுகளை சேர்ந்த இளம் ஹாக்கி அணிகள் பங்கேற்று உள்ளனர்.

28.11.2025 அன்று சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் 14-ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டியின் தொடக்கவிழாவில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்ல காரணமான மற்றும் கலந்து கொண்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹாக்கி வீரர்கள் உள்ளிட்ட இந்திய அணியின் மூத்த வீரர்கள் பத்மஸ்ரீ வி.பாஸ்கரன், அர்ஜுனா விருது பெற்ற முகமது ரியாஸ், அர்ஜுனா விருது பெற்ற வி.ஜே.பிலிப்ஸ், எஸ். திருமால் வளவன், சார்லஸ் கோர்னீலியஸ், பி.பி.கோவிந்தா, முனீர் சேட் உள்ளிட்ட மூத்த வீரர்களை சிறப்பித்து ”காளையன்” நினைவு பரிசினை வழங்கினார்.

முன்னதாக தொடக்க விழாவினை முன்னிட்டு, கண்கவர் வாண வேடிக்கை மற்றும் மின்விளக்குகளின் வண்ண ஜாலத்துடன் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

தொடர்ந்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்தியா - சிலி நாடுகளுக்கிடையே நடைபெற்ற போட்டியை தொடங்கி வைத்து, இரு நாட்டு வீரர்களுக்கும் கைகுலுக்கி வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பீகார் மாநில ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் சர்வண்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், மருத்துவர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஆர்.டி. சேகர், இ.பரந்தாமன், ஆர்.மூர்த்தி, அ.வெற்றி அழகன், ஜே.ஜே.எபினேசர், திருமதி தமிழரசி ரவிக்குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, சர்வதேச ஹாக்கி சம்மேளனத் தலைவர் டத்தோ தயாப் இக்ரம், இந்திய ஹாக்கி சங்கத் தலைவர் திலீப் திர்கி, செயலாளர் போலாநாத் சிங், பொருளாளர் சேகர் ஜெ.மனோகரன், இயக்குநர் (பொது) கமாண்டர் ஆர்.கே. ஸ்ரீவத்சவா, பல்வேறு நாடுகளின் ஹாக்கி சங்க நிர்வாகிகள், ஹாக்கி விளையாட்டு வீரர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ந.திலிப்குமார் தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாபெரும் ரத்ததான முகாம்!

## கே.இ.பிரகாஷ் எம்.பி. – டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. துவக்கி வைக்கின்றனர்!

*சென்னை, நவ. 30 -*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில், கொளத்தூர் மேற்கு பகுதியில், மனிதநேய உதய நாளை முன்னிட்டு - மாபெரும் இரத்தான முகாமை - கே.இ.பிரகாஷ், எம்.பி டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில், கொளத்தூர் மேற்கு பகுதியில், மனிதநேய உதயநாளை முன்னிட்டு “உதயம் - 15”, உதயத்தின் படை! உதிரத்தின் கொடை! எனும் தலைப்பில், மாபெரும் இரத்தான முகாம் இன்று (30-11-25 ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 மணியளவில், சென்னை, அகரம், ஸ்ரீ முருகன் திருமண மாளிகை, நால்வர் திருமண மாளிகையில் நடைபெறுகிறது.*

*இந்த இரத்ததான முகாமில், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ந.திலிப்குமார் தலைமை வகிக்க, மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, பகுதிச் செயலாளர்கள் எ.நாகராசன், ஐ.சி. எப்.வ.முரளிதரன், இளைஞரணி வானவில் விஜய், சி. மகேஷ்குமார், கே.சந்துரு, சரிதாமகேஷ்குமார், தேவஜவகர், எஸ்.பன்னீர்செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன், ஆர். எஸ்.சித்திக், ம.அசோக்குமார் முன்னிலை வகிக்கின்றனர்.*

*ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர் நானா, க.பிரசாத், ஆர். இளங்கோ, மு.தாவூத் உசேன், ஜீ.பிரபாகரன்(எ) பரத், ம. சரண்ராஜ், த.நிர்மல், தி. கணேஷ், அ.கிமேன்ட் சிரில், க.மோகன், அ.வினோத், ஜெ.ராஜப்பா, மு.சந்தானம், எஸ்.புவனேஷ், ரா.மணிகண்டன், ரா.விஜய், உ.விக்னேஷ், வி.டில்லிராஜ் ஆகியோர் வரவேற்கின்றனர்.*

*இம்மாபெரும் இரத்ததான முகாமை - கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ், எம்.பி மற்றும் கழக அயலக அணி தலைவர் டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.*

*முகாமில், மேயர் பிரியா ராஜன், கழக சட்ட திட்ட திருத்தக் குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.எ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ மற்றும் ப. ரங்கநாதன், இரா.விடுதலை, கே.எஸ். இரவிச்சந்திரன், பி. கே.மூர்த்தி எம்.சி, தமிழன்பிரசன்னா, சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, கவிஞர்நன்மாறன், எம்.விஜயகுமார், கே. எஸ்.எம்.நாதன், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்.சி, ஆர்.வரதன், வே.உமாகாந்த், மாவட்ட கழக நிர்வாகிகள்: கோ.எகப்பன் ஜி.மகாதேவன் புனிதவதிஎத்திராசன், இசட். ஆசாத். மண்டல குழு நிலைக் குழு தலைவர்கள்: கூ.பி. ஜெயின் ப.ஸ்ரீராமுலு சொ. வேலு டாக்டர்.ஜி.சாந்தகுமாரி*

*பகுதிச் செயலாளர்கள்: செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வே.வாசு, எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், வி.சுதாகர்,. உள்ளிட்ட கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*வட்டச் செயலாளர் எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

# அனகாபுத்தூரில் கழகக் கொடியேற்றி நல உதவிகள்!

## மேயர் வசந்தகுமாரி வழங்கினார்! த.ஜெயக்குமார் நிகழ்ச்சி ஏற்பாடு!

சென்னை, நவ. 30-

பம்மல் வடக்கு பகுதி அனகாபுத்தூரில் துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் தாம்பரம் மேயர் வசந்தகுமாரி பகுதி செயலாளர் த.ஜெயகுமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில் கழக கொடியேற்றி நலத் திட்டங்கள் வழங்கினார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி அனகாபுத்தூரில் மாண்புமிகு தமிழக துணை முதல்வரும். கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அனகாபுத்தூர் கழக அலுவலகத்தில் வடக்குப் பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் ஏற்பாட்டில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கழக கொடியேற்றினார். தொடர்ந்து 500 நபர்களுக்கு பிரியாணி வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர அவைத்தலைவர் கோ.காமராஜ், பகுதி கழக நிர்வாகிகள் கே.சந்திரன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா. ச.பிரபு, தாம்பரம் மாநகர பிரதிநிதிகள் சி.பார்த்தசாரதி, இரா.குமரேசன், இரா.பாபுஜி வட்டக்கழக செயலாளர்கள் ப.அன்பழகன், க.மோகன், மு.நி.தமிழ்குமரன். ப.ஆண்டவன். டி.எம்.ஜோசப், இ.பாலாஜி, மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் கலைவாணி பிரபு வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், சண்முகசுந்தரி ஜெயகுமார், சித்ராதேவி முரளிதரன் மற்றும் மாவட்ட கழக துணை அமைப்பாளர்கள், வட்டக்கழக நிர்வாகிகள், தாம்பரம் மாநகர அமைப்பாளர்கள். துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், பம்மல் வடக்கு பகுதி இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயகுமார் அவர்கள் நிகழ்ச்சி ஏற்பாடு செய்தார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு எல்லாபுரம் வடக்கு ஒன்றியம் ராள்ளப்பாடி மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மறுவாழ்வு மையத்தில் மாவட்ட அமைப்பாளர் கே.வி.லோகேஷ் ஏற்பாட்டில் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., மதிய உணவு வழங்கினார். உடன் ஜெ.மூர்த்தி, இளைரணி துணை அமைப்பாளர்கள் ஜெ.மோகன்பாபு, டி.சங்கர், இரா.கதிரவன், எஸ்.ரமேஷ், மு.கதிரவன், ஏ.வி.ராமமூர்த்தி, வி.பி.ரவிகுமார், மு.கேசவன், கே.வி.நாகராஜ், ஜி.சுமன், ஜெயலலிதாசசிதரன், கா.சம்பத், ஜெ.முனுசாமி, ஏ.சீனிவாசன், எஸ்.பாபு, இரா.அப்புன், ஐ.ராஜா, கார்த்திகேயன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.


